**O.S.No. 176/2022 நாள் 12.01.2026 PW 1 – திரு. கண்ணன்**

(சாட்சி மீண்டும் உதவியாளரால் பிரமாணம் செய்யப்பட்டு அனுமதியின்பேரில் தொடர்ந்து குறுக்குவிசாரணை செய்யப்படுகிறார்.)

குறுக்குவிசாரணை (1, 3 பிரதிவாதிகள்தரப்பில்)

1ம் பிரதிவாதி என் அண்ணன் என்றால் சரிதான். 3ம்பிரதிவாதி என் அண்ணனின் மனைவி என்றால் சரிதான். இந்த வழக்கு சொத்துக்கள் அனைத்தும் எனது அப்பாவின் சொத்துக்கள் என்றால் சரிதான். என்னுடைய தாயார் எப்பொழுது இறந்தார் என்றால் 2013 ஆம் ஆண்டு. தாவா சொத்துக்கள் எல்லாவற்றிற்கும் என் அண்ணன் பெயருக்கு பெயர் மாற்றம் செய்யப்படவில்லை என்றாலும், சிலவற்றிற்கு மட்டும்தான் பட்டா பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரிதான். 20 அயிட்ட சொத்துக்களில் 10, 11, 12, 13 அயிட்டங்கள் என் அண்ணன் பெயரில் பட்டா மாறியுள்ளது என்றால் சரிதான். 3ம் பிரதிவாதிக்கு 6, 7, 8, 9 அயிட்ட சொத்துக்களை பொறுத்து தானசெட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி எழுதிக்கொடுத்த சொத்திற்கும் என் அண்ணன் பெயரில் பெயர் மாற்றம் செய்துதான் எழுதிக்கொடுத்தார் என்றால் சரிதான். 20 அயிட்ட சொத்துக்களில் 8 அயிட்ட சொத்தை மட்டும்தான் என் அண்ணன் அவர் பெயரில் பட்டா மாற்றம் செய்துள்ளார் என்றால் சரிதான். 1,2,3 அயிட்டங்கள் சேர்ந்துதான் உள்ளது என்றும், வடக்கு பாகத்தை எனது பாகத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் அவர்களாகவே ஒதுக்கி விட்டார்கள். 1,2,3 அயிட்ட சொத்துக்களில் தெற்கே உள்ள 1 ஏக்கரில் பிரதிவாதி வீடு கட்டியுள்ளார் என்றால் சரிதான். என் அண்ணன் எந்த வருடம் வீடு கட்டினார் என்றால் என் அப்பா இறந்தபிறகு கட்டினார். என் அம்மா இறந்தபிறகு எந்த வருடம் வீடு கட்டியிருப்பார்கள் என்றால் என் அம்மா இறந்தபிறகு 2,3 வருடங்களில் கட்டினார். நான் அந்த வீடு கட்டும்போது கட்டக்கூடாது என்று எந்த ஆட்சேபணையும் செய்யவில்லை என்றால் வாய்மொழியாக ஆட்சேபித்தேன், அவர் பின்னால் பார்த்துக்கொள்ளலாம் என்று கூறினார். வடக்கடைய 1 ஏக்கர் நிலத்தில் வீடு கட்டி கொள்வதில் ஆட்சேபணை இருக்கிறதா என்றால் பிரித்து தரவில்லை. வடக்கடைய 1 ஏக்கர் நிலத்தை எனக்கு பிரித்து தந்தால் ஏற்றுக்கொள்ள தயாரா என்றால் எனக்கு சட்டப்பூர்வமாக ஆவணங்கள் வாயிலாக வேண்டும். அங்கமங்கலம் கிராமத்தில் சர்வே எண். 10/1, 10/2 ஆகிய சர்வே எண்கள் என் அப்பாவிற்கு உள்ள சொத்துதான் என்றால் சரிதான். சர்வே எண். 10/1, 10/2 சர்வே எண்களையும் இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரியல்ல, வழக்கில் சொல்லியுள்ளேன். என்னிடம் காட்டப்படும் பிராதில்

BREETHA M

Digitally signed by BREETHA M
Date: 2026.01.12 19:42:34 +0530

சர்வே எண். 10/1, 10/2 சர்வே எண்கள் காண்பிக்கப்படவில்லை என்றால் சரியாக படிக்க தெரியாது. என் அண்ணன் இந்த வழக்கில் என்ன கட்சி செய்கிறார் என்றால் எனக்கு பாகம் எதுவுமே கொடுக்கமுடியாது என்று சொல்கிறார். என் அண்ணன் எதிர்வழக்குரையில் வழக்கு சொத்து என் அப்பா சொத்துதான் என்று சொல்கிறார் என்றால் சரிதான். எதிர்வழக்குரையில் தாயார் உயிருடன் இருந்த காலத்திலேயே நான், என் அண்ணன், சகோதரி என் அப்பாவின் சொத்துக்களை வாய்மொழியாக பிரித்து கொண்டோம் என்று சொல்லியுள்ளார் என்றால் இல்லை. என் அண்ணன் தாயார் உயிருடன் இருந்த காலத்திலேயே எங்களுக்குள் குடும்ப பாகப்பிரிவினை ஏற்பட்டுவிட்டது என்று சொன்னால் சரியல்ல. குடும்ப வாய்மொழி பாகப்பிரிவினையில் வழக்கு 1,2,3 அயிட்ட சொத்துக்களில் தெற்கடைய 1 ஏக்கர் எனது அண்ணனுக்கும், வடக்கடைய 1 ஏக்கர் எனக்கும் பிரித்து ஒதுக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. வழக்கு 6, 7, 8, 9, 10, 11, 12, 13 ஆகிய அயிட்ட சொத்துக்கள் வாய்மொழி பாகப்பிரிவினையில் என் அண்ணனின் பாகத்திற்கு ஒதுக்கப்பட்டது என்றுசொன்னால் சரியல்ல. வாய்மொழி பாகப்பிரிவினையில் எனக்கு வழக்கு தபசிலில் 4,5, 14 முதல் 20 அயிட்ட சொத்துக்கள் மற்றும் அங்கமங்கலம் கிராமத்தில் உள்ள சர்வே எண். 10/1, 10/2 ல் 34 ½ ஏர் ஆகியவைகள் எனது பாகத்திற்கு ஒதுக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. எனக்கு மேற்சொன்ன 11 அயிட்ட சொத்துக்களை ஒதுக்கினால் நான் அதை பெற்றுக்கொள்ள தயாரா என்றால் 3 பாகமாக பிரிக்க வேண்டும். எனது சகோதரிக்கு எனது தந்தை நகைகள் சீர் சீராட்டுக்கள் கொடுத்துதான் திருமணம் செய்து வைத்தார்கள் என்றால் இல்லை, என் அப்பா இறந்தபிறகுதான் திருமணம் நடந்தது. என் அக்காவிற்கு நகை, சீர்சீராட்டுக்கள் எதுவும் கொடுக்கவில்லை. எனது சகோதரிக்கு எப்போது திருமணம் நடந்தது என்றால் தேதி மாதம் ஞாபகமில்லை. என் அக்காவிற்கு திருமண சமயத்தில் நகைகள், சீர்சீராட்டுக்கள் கொடுத்தால் என் அம்மா இருக்கும்போது பாகம் பிரிக்கும்போது அங்கமங்கலம் கிராமத்தில் உள்ள சர்வே எண் 10/2 ல் எனக்கு கொடுத்த பாகம் போக மீதி இருந்த 20 கூர்னி இடம் அவரது பாகத்திற்கு கொடுத்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. சர்வே எண். 10/1, 10/2 ஐ யார் அனுபவம் செய்து வருகிறார் என்றால் என் அண்ணன்தான் அனுபவம் செய்கிறார். 6 முதல் 13 அயிட்ட சொத்துக்களை என் அண்ணன்தான் அனுபவம் செய்து வருகிறாரா என்றால் எல்லாமே என் அண்ணன்தான் அனுபவம் செய்கிறார். 6 முதல் 13 அயிட்ட சொத்துக்களில் என்ன விவசாயம் நடைபெறுகிறது என்றால் நெல் விவசாயம் நடைபெறுகிறது. 4,5 அயிட்ட சொத்துக்கள் மற்றும் 14 முதல் 20 அயிட்ட சொத்துக்கள் விவசாயம்

BREETHA M
Digitally signed by BREETHA M
Date: 2026.01.12 19:42:29 +0530

செய்யாமல் தரிசாக கிடக்கின்றது என்றால் இல்லை, விவசாயம் நடைபெறுகிறது. அந்த இடங்களில் விவசாயம் நடைபெறுகிறது என்பதை காட்ட அடங்கல் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு வாய்மொழியாக பாகம் ஒதுக்கிய சொத்துக்களை விவசாயம் செய்யாமல் தரிசாக போட்டுவிட்டேன் என்றுசொன்னால் எனக்கு எதுவும் தரவேயில்லை. எனது அண்ணன் அவருக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களில் நல்ல வருமானம் எடுத்து சம்பாதிப்பதால் நான் 2ம் முறையாக பாகம் பிரிக்கவேண்டும் என்றும், அந்த சொத்தை அபகரிக்க வேண்டும் என்று இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது சகோதரி என்னுடன் நல்ல பேச்சுவார்த்தையில்தான் உள்ளார் என்றால் இல்லை. எனது சகோதரிக்கு நான்தான் வழக்கறிஞர் ஏற்பாடு செய்து கொடுத்தேனா என்றால் இல்லை. என்னுடன் வந்து அவர் வேறு வழக்கறிஞர் நியமனம் செய்து கொண்டார். நானும், எனது சகோதரியும் ஏற்கனவே குடும்பத்தில் நடந்த பாகப்பிரிவினையை ரத்து செய்துவிட்டு வேறு புதியதாக என் அண்ணனுக்கு ஒதுக்கப்பட்ட சொத்தை எங்களுக்கு ஒதுக்க வேண்டும் என்றுதான் இந்த வழக்கை வம்பாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ஏற்கனவே பாகத்தை பிரித்துவிட்டதால் அந்த பாகப்பிரிவினையை ரத்து செய்துவிட்டு, எனக்கு பாகம் பிரித்து தரவேண்டும் என்று தாக்கல் செய்திருக்க வேண்டுமே தவிர, அதற்கு இல்லாமல் பாகம் வேண்டும் என்று கேட்டுள்ளது ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்றால் சரியல்ல. அனைத்து சொத்துக்களையும் அண்ணன் தனித்து அனுபவம் செய்துள்ளதாக கட்சி செய்துள்ள நான், நீதிமன்ற கட்டணம் செலுத்தும்போது கூட்டு அனுபவம் என்று சொல்லிதான் நீதிமன்ற கட்டணம் செலுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் நீதிமன்றத்தை சுத்தமான கரங்களுடன் அணுகவில்லை என்றாலும், நான் பொய் சங்கதிகளை கொண்டு வழக்கு தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படக்கூடியது என்றுசொன்னால் சரியல்ல. என்அண்ணனுக்கு ஒதுக்கப்பட்ட சொத்தை அவரது மனைவிக்கு எழுதிவைத்ததை நான் கேள்விக்கேட்டமுடியாது என்றுசொன்னால் அது என் அப்பா சம்பாத்திய சொத்து. அவர்களாகவே எழுதிக்கொண்டார்கள். அவருக்கு ஒதுக்கப்பட்ட சொத்தை என் அண்ணன் அவர் பெயரில் பட்டா மாற்றிக்கொண்டார் என்றாலும், நான் பட்டா மாற்றம் செய்யாமல் வைத்திருக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் உண்மைக்கு மாறாக சாட்சியமளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

BREETHA M

Digitally signed by BREETHA M
Date: 2026.01.12 19:42:24 +0530

குறுக்குவிசாரணை (2ம் பிரதிவாதிதரப்பில்)

2ம் பிரதிவாதி என்னுடைய அக்கா என்றால் சரிதான். வழக்கு சொத்துக்கள் அனைத்தும் என் அப்பாவின் சொத்துக்கள் என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் எதுவுமே பாகப்பிரிவினை செய்யவில்லை என்றால் சரிதான்.

மறுவிசாரணை இல்லை.

BREETHA M

Digitally signed by BREETHA M
Date: 2026.01.12 19:42:19 +0530